# புது வாழ்வு புலரவேண்டும் வார்த்தை

புது வாழ்வு புலரவேண்டும் ( 2 )
வார்த்தை மனுவாக - மண்ணில்
நீதி நிலைக்க வேண்டும் ( 2 )
நிலை மாறுமா? கரம் சேருமா? மனம் மாறுமா? துயர் தீருமா?
நிலை மாறுமே கரம் சேருமே மனம் மாறுமே துயர் தீருமே
விண்ணும் மண்ணும் சேரும் நாட்கள் விரைவில் நாம் காண்போம்

**1**
பாலும் தேனும் பொழிந்திடுமே கானான் கனவு பலித்திடுமே
பாறையில் தண்ணீர் சுரந்திடுமே மன்னா நமது தரை விழுமே
பாலை நிலங்கள் யாவும் இனி பசுமை நிறைந்ததாகும் ( 2 )
விண்ணும் மண்ணும் சேரும் நாட்கள் விரைவில் நாம் காண்போம் ( 2 )

**2**
சிங்கமும் கன்றும் தோழமையில் சிறுவர் நட்பில் பாம்பருகில்
வேலும் வாழும் ஏர் முனையில்
துதிக்கைகள் எல்லாம் பூப்பொழிவில்
வாழும் மனங்கள் யாவும் இனி பாசம் நிறைந்ததாகும் ( 2 )
விண்ணும் மண்ணும் சேரும் நாட்கள் விரைவில் நாம் காண்போம் ( 2 )